(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 346.]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2014 மாச்சு 06, வியாழக்கிழமை, பி.ப. 1.00 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

3146/ '12

1.

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2010 சனவரி 1 முதல் இற்றைவரை இந்தியாவிடமிருந்து இலங்கை பெற்றுக்கொண்ட உதவிகள், சலுசைக் கடன்கள், நன்கொடைகள் ஆகியவற்றின் அளவை தனித்தனியாக வருடாந்த அடிப்படையிலும்;

(ii) வருடமொன்றுக்கு வழங்கப்பட்ட நிதியங்களுக்கான அனைத்தையும் உள்ளிட்ட ஆகக்குறைந்த வட்டிச் செலவு யாது என்பதையும்;

(iii) ஒவ்வொரு நிதியையும் திரும்பச் செலுத்துவதற்கான காலப்பகுதி எவ்வளவு என்பதையும்;

(iv) குறிப்பிடப்பட்ட நிதியங்கள் பயன்படுத்தப்பட்ட ஒவ்வொரு கருத்திட்டத்திலிருந்தும் ஈட்டுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட பணத்தின் அளவு எவ்வளவு என்பதையும்;

(v) கடன் வழங்கப்பட்ட திகதியிலிருந்து 5 வருடங்களுக்கான காசுப்பாய்ச்சல் கூற்றினையும்

அவர் கூறுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3293/ '12

2.

கௌரவ புத்திக பதிரண,— வெகுசன ஊடக, தகவல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) இலங்கையில் ஊடகவியலாளர்களுக்கு நேரிடுகின்ற இடையூறுகள் குறித்து ஆராய்வதற்காக 2008 ஜூன் மாதத்தில் பண்டாரநாயக்க மாநாட்டு மண்டப அறை இலக்கம் 2/08 இல் இளைஞர் அலுவல்கள், திறன் அபிவிருத்தி அமைச்சரின் தலைமையில் அமைச்சர்களின் உபகுழுவொன்று நியமிக்கப்பட்டது என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) தற்போது மேற்படி உபகுழு இரத்துச் செய்யப்பட்டுள்ளதா;

(ii) ஆமெனில், இதற்கான காரணங்கள் யாவை

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) மேற்படி உபகுழுவின் நடவடிக்கைகளை நடத்திச் சென்ற கட்டிடத்திற்கான வாடகை, தொலைபேசிக் கட்டணப் பட்டியல், மின்சாரக் கட்டணப் பட்டியல் என்பவற்றுக்காக செலவழிக்கப்பட்ட பணத்தொகை வருடாந்த ரீதியில் வெவ்வேறாக யாது;

(ii) மேலே (i) இல் குறிப்பிடப்பட்ட செலவுகளுக்கு மேலதிகமாக ஏற்கப்பட்ட ஏனைய செலவுகளுக்காக செலவிடப்பட்ட மொத்தப் பணத்தொகை வருடாந்த ரீதியில் வெவ்வேறாக எவ்வளவு

என்பதை அவர் குறிப்பிவாரா?

(ஈ) (i) மேற்படி செலவுகளை மேற்கொண்ட அமைச்சுக்கள் மற்றும் அவற்றுக்கு உரிய செலவுத் தலைப்புக்கள் யாவை;

(ii) மேலே குறிப்பிடப்பட்ட கொடுப்பனவுகள் இதுவரையில் மேற்கொள்ளப் படவில்லையெனின், இக்கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படும் திகதி யாது

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

3609/ '13

3.

கௌரவ பி. ஹரிசன்,— அனர்த்த முகாமைத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2012 திசெம்பர் மற்றும் 2013 சனவரி காலப் பகுதியில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கு காரணமாக அநுராதபுர மாவட்டத்தில் விலச்சிய பிரதேச செயலாளர் பிரிவில்,

(i) பாதிக்கப்பட்ட குடும்பங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) முழுமையாக மற்றும் ஒரு பகுதி சேதமடைந்ததால் இழப்பீடு வழங்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iii) இழப்பீடு வழங்கப்படாத முழுமையாக மற்றும் ஒரு பகுதி சேதமடைந்த வீடுகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி வெள்ளப்பெருக்கு காரணமாக இப் பிரதேச செயலாளர் பிரிவில் சேதமடைந்த பயிர்ச்செய்கைகள் யாவை என்பதையும்;

(ii) இப் பயிர்ச்செய்கை காணிகளின் பரப்பளவு யாது என்பதையும்;

(iii) முழுமையாக சேதமடைந்த மற்றும் ஒரு பகுதி சேதமடைந்த வயல் ஏக்கர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(iv) முழுமையாக சேதமடைந்த ஏனைய பயிர்ச்செய்கைக் காணி ஏக்கர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(v) முழுமையாக சேதமடைந்த மற்றும் ஒரு பகுதி சேதமடைந்த ஒரு ஏக்கர்வயல் காணிக்கு வழங்கப்படும் இழப்பீட்டுத் தொகை வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(vi) முழுமையாக மற்றும் ஒரு பகுதி சேதமடைந்த ஏனைய மேலதிக பயிர்ச் செய்கைகளுக்கு இழப்பீடு வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(vii) அவ்வாறாயின், வழங்கப்பட்டுள்ள இழப்பீட்டுத் தொகை வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(viii) மேலே குறிப்பிட்டவாறு இழப்பீடு வழங்கப்படாவிடின் அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3732/ '13

4.

கௌரவ ரஞ்சன் ராமநாயக்க,— வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு, நலனோம்புகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தில் மேலதிக பொதுமுகாமையாளர் பதவியை வகிப்பவரின் பெயர் யாது;

(ii) மேற்படி பதவியை வகிப்பவரினால் பெற்றுக் கொள்ளப்படும் மாதாந்த சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் எவ்வளவு

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவராண்மையில் பொது முகாமையாளர் பதவியை வகிப்பவரின் பெயர் யாது;

(ii) மேற்படி பதவியை வகிப்பவரினால் பெறப்படும் மாதாந்த சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் எவ்வளவு;

(iii) மேற்படி பதவியை வகிப்பவருக்கும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு, நலனோம்புகை அமைச்சருக்கும் இடையே உறவு முறை காணப்படுகின்றதா;

(iv) ஆமெனின், அந்த உறவு முறை யாது

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) ஒரே நபரால் மேலே குறிப்டப்பட்ட இரண்டு நிறுவனங்களிலும் பதவி வகிக்க முடியுமா;

(ii) இதன்படி இரண்டு நிறுவனங்களிலும் பதவி வகித்தல் தவறாக இருப்பின், அதனை திருத்துவதற்கு நடவடிக்கை எடுப்பாரா

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

4074/ '13

5.

கௌரவ (திருமதி) அனோமா கமகே,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் பாதுகாப்பற்ற புகையிரதக் குறுக்குப் பாதைகளில் ஏற்பட்டுள்ள விபத்துக்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) அவ்வாறான விபத்துக்கள் காரணமாக அங்கவீனமடைந்தவர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி விபத்துக்களை குறைப்பதற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) தற்போது அடையாளங்காணப்பட்டுள்ள பாதுகாப்பற்ற புகையிரதக் குறுக்குப் பாதைகள் காணப்படுகின்ற இடங்கள் யாவையென்பதையும்;

(ii) அந்தந்த இடங்களில் விபத்துக்களை குறைப்பதற்காக மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கும் பாதுகாப்பு வேலைத்திட்டங்கள் வெவ்வேறாக யாவையென்பதையும்;

(iii) மேற்படி பாதுகாப்பு வேலைத்திட்டங்களுக்கு செலவாகும் பணத் தொகை மதிப்பிடப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனில், அப் பணத்தொகை எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) கடந்த இரண்டு வருட காலப்பகுதியில் பொருத்தப்பட்டுள்ள புதிய புகையிரத பாதுகாப்புக் கடவைகள் மற்றும் பாதுகாப்பு மின் சமிக்ஞை முறைமைகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி பொருத்துதல்கள் மேற்கொள்ளப்பட்ட இடங்கள் யாவையென்பதையும்

(iii) அதற்காக ஏற்கப்பட்ட செலவு எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

4105/ '13

6.

கௌரவ (திருமதி) ரோஸி சேனாநாயக்க,— பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) ஊவா மாகாணத்தின் பதுளை மாவட்டத்தில் ஹப்புத்தளை தேர்தல் தொகுதிக்குரிய "குமாரதென்ன" கிராமத்தில்,

(i) வசிக்கும் குடும்பங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(ii) பிரவேசப் பாதையை அமைப்பதற்காக "கிராமங்களுக்கிடையிலான" நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) மேற்படி பாதைக்காக நிதி ஒதுக்கப்பட்டிருப்பின், அத்தொகை எவ்வளவு என்பதையும்;

(iv) மேற்படி பாதையின் பணிகள் நிறைவு செய்யப்பட வேண்டிய திகதி யாதென்பதையும்;

(v) பாடசாலையின் ஆசிரியர்களின் எண்ணிக்கை மற்றும் மாணவர்களின் எண்ணிக்கை தனித்தனியே எவ்வளவென்பதையும்;

(vi) கிராமவாசிகள் மருத்துவ வசதிகளை பெற்றுக்கொள்வதற்கான வைத்தியசாலை தாபிக்கப்பட்டுள்ள பிரதேசம் யாதென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4153/ '13

7.

கௌரவ அனுர திசாநாயக்க,— கல்விச் சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2012 ஆம் ஆண்டில் பாடசாலை சீருடைகளுக்காக சீனாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட துணிகளின் அளவு எவ்வளவு;

(ii) அதற்காக செலவிடப்பட்ட பணத் தொகை எவ்வளவு;

(iii) அத் துணிகளை இறக்குமதி செய்த கம்பனி யாது;

(iv) அக் கம்பனியின் ஊடாக மேற்படி சீருடைத் துணிகள் எந்த அடிப்படையில் இறக்குமதி செய்யப்பட்டன

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) 2012 ஆம் ஆண்டுக்கு சீருடை வழங்குவதற்காக கேள்விப் பத்திரங்களை சமர்ப்பித்த கம்பனிகள் மற்றும் விலைகள் யாவை;

(ii) மேற்படி கம்பனிகளில் குறைந்த விலைக் கேள்வியை சமர்ப்பித்த கம்பனியா தெரிவுசெய்யப்பட்டது;

(iii) இன்றேல், அதற்கான காரணங்கள் யாவை;

(iv) குறைந்த விலைக் கேள்வியை சமர்ப்பித்த கம்பனியினால் சமர்ப்பிக்கப்பட்ட துணிகளில் காணப்பட்ட குறைபாடுகள் யாவை;

(v) தெரிவுசெய்யப்பட்ட கம்பனி சமர்ப்பித்த சீருடைத் துணிகளிலும் மேற்கூறிய குறைபாடுகளைப் போன்றே மேலும் பல குறைபாடுகளும் இருந்தன என்பதை ஏற்றுக்கொள்வாரா

என்பதை அவர் இச் சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன் ?

4337/ '13

8\.

கௌரவ (கலாநிதி) ஹர்ஷ டி சில்வா,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தேசமான்ய, தேசபந்து, லங்காபுத்ர, கலாநிதி மற்றும் ஸ்ரீ லங்கா ஜனரஞ்சன ஆகிய கௌரவ பட்டங்களை வழங்கும் நிறுவனங்கள் அல்லது ஆட்கள் யாவர் என்பதையும்;

(ii) மேற்படி நிறுவனங்களின் அல்லது ஆட்களின் விதப்புரைகளின் அடிப்படையில் மேலே குறிப்பிடப்பட்ட விருதுகள் வழங்கப்பட வேண்டிய ஆட்கள் மேலும் இருக்கின்றார்களா என்பதையும்;

(iii) ஆமெனில், அந்த ஆட்கள் யாவர் என்பதையும்;

(iv) 2013 ஆம் ஆண்டினுள் மேலே குறிப்பிடப்பட்ட ஒவ்வொரு கௌரவ பட்டத்தையும் வழங்குவதற்கு சிபாரிசு செய்யப்பட்டுள்ள ஆட்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3148/ '12

9\.

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2009, 2010, 2011, 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் பெற்றுள்ள கடன்களின் தொகை எவ்வளவு என்பதையும்;

(ii) நிகர ஒதுக்குகள் வெகுவாக அதிகரித்துள்ளதாக அரசாங்கம் கூறுவதன் பிரகாரம் மேற்படி ஆண்டுகளில் ஒதுக்குகளின் அதிகரிப்பின் அளவு யாதென்பதையும்

அவர் கூறுவாரா?

(ஆ) (i) இற்றைவரைக்கும் ஒதுக்குகளில் உள்ளடக்கப்பட்டுள்ள நீண்டகாலக் கடன்களின் தொகை என்னவென்பதையும்;

(ii) கடந்த மூன்று வருடங்களில் இறக்குமதிகளின் விகிதமாக ஒதுக்குகளின் தொகை ஆண்டு அடிப்படையில் எவ்வளவு என்பதையும்

அவர் கூறுவாரா?

(இ) கூறப்படுவது போன்று ஒதுக்குகளின் நிலை சாதகமானதல்ல என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

3527/ '13

10\.

கௌரவ புத்திக பதிரண,— கலாசார, கலை அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பலப்பிட்டிய பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள மத்திய கலாசாரப் நிதியத்திற்குச் சொந்தமான 'கருமுனி வலவ்வ' ஒரு தொல்பொருளியல் பெறுமதிமிக்க இடமென்பதையும்;

(ii) இதற்குச் சொந்தமான கட்டிடங்கள் தற்போது சிதைவடைந்து வருகின்றதென்பதையும்;

(iii) இந்த 'வலவ்வ' வுக்குச் சொந்தமான நிலப்பரப்பின் பகுதிகளை பலவந்தமாக சில நபர்கள் கைப்பற்றியுள்ளதாக பிரதேச மக்கள் குற்றம் சாட்டுகின்றனரென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) கட்டிடங்களை மறுசீரமைத்த பின்னர் அரசுக்கு மேலதிக வருமானத்தை ஈட்டித்தரக்கூடியவாறு 'கருமுனி வலவ்வ' வை உபயோகிக்க முடியுமென்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா;

(ii) அவ்வாறாயின், இதை மறுசீரமைக்க நடவடிக்கை மேற்கொள்வாரா;

(iii) இதற்கான நிதி ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டுள்ளதா;

(iv) அவ்வாறாயின் ஒதுக்கப்பட்டுள்ள பணத்தொகை எவ்வளவு;

(v) மறுசீரமைப்பு வேலைகள் ஆரம்பிக்கப்படும் திகதி யாது;

(vi) இவ் வலவ்வவிற்குச் சொந்தமான காணியை பலவந்தமாக கைப்பற்றியுள்ளவர்களை அகற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்வாரா;

(vii) அவ்வாறாயின் அத்திகதி யாது

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3610/ '13

11.

கௌரவ பி. ஹரிசன்,— நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள், மற்றும் கப்பற்றுறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கெகிராவ பிரதேச செயலாளர் பிரிவில் மரதன்கடவல தொடக்கம் பஹல அம்பதலே ஊடாக மூரியாகடவல வீதியின் திருத்த வேலைகள் ஆரம்பிக்கப்பட்ட திகதி யாது என்பதையும்;

(ii) இவ்வீதியின் நீளம் மற்றும் திருத்த வேலைக்காக மதிப்பீடு செய்யப்பட்ட பணத் தொகை யாது என்பதையும்;

(iii) இவ்வீதியின் திருத்த வேலைகளை செய்யும் ஒப்பந்தக்கார கம்பனியின் பெயர் மற்றும் அதன் உரிமையாளரின் பெயர் யாது என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இவ்வீதியின் வேலைகளை நிறைவு செய்ய வேண்டியிருந்த உடன்படிக்கை செய்துகொள்ளப்பட்ட திகதி யாது என்பதையும்;

(ii) இக் கால எல்லைகயில் இவ்வீதியின் வேலைகளை நிறைவு செய்ய முடியாமல் போயிருப்பின் அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iii) மேலே குறிப்பிடப்பட்ட ஒப்பந்தக்கார கம்பனி அநுராதபுர மாவட்டத்தில் வேறு வீதி நிர்மாண வேலைகளைப் பொறுப்பேற்றுள்ளதா என்பதையும்;

(iv) அவ்வாறாயின் இந்த ஒவ்வொரு வீதியின் பெயர் மற்றும் மதிப்பீடு செய்யப்பட்ட பணத்தொகை வெவ்வேறாக யாவை என்பதையும்;

(v) இவ்வீதி நிர்மாண வேலைகளை நிறைவு செய்யும் போது மேற்குறிப்பிட்டவாறு உரிய காலத்தை தாண்டி, காலம் கடத்தப்பட்டுள்ளதா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) மேற்குறிப்பிட்ட ஒப்பந்தக்கார கம்பனியினால் வீதி அபிவிருத்தி நிர்மாண வேலைகளை சரிவரச் செய்ய முடியாதென்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்

(ii) அவ்வாறாயின் இவ்வாறானதொரு ஒப்பந்தக்கார கம்பனி தொடர்பாக எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

4106/ '13

12.

கௌரவ (திருமதி) ரோஸி சேனாநாயக்க,— சுற்றாடல், புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) அரசாங்கத்தினால் தேசிய பௌதீக திட்டமிடல் திணைக்களத்தின் கீழ் சமர்ப்பிக்கப்பட்டுள்ள "தேசிய பௌதீக திட்டம்" பற்றி விழிப்புணர்வடைந்துள்ளாரா என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி திட்டத்திற்கு அமைவாக,

(i) பயன்படுத்தப்படவுள்ள வன நிலப் பரப்பளவு எவ்வளவென்பதையும்;

(ii) வனத்திற்கு குறுக்காக நெடுஞ்சாலைகள் நிர்மாணிக்கப்படவுள்ள பிரதேசங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iii) வனத்தின் மத்தியில் சுற்றுலா வலயங்கள் நிர்மாணிக்கப்படுவுள்ள இடங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4154/ '13

13.

கௌரவ அனுர திஸாநாயக்க,— கல்விச் சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2011 நவம்பர் 02ஆம் திகதிய அமைச்சரவை அங்கீகாரத்தின் கீழ் 2012ஆம் ஆண்டில் விநியோகிப்பதற்காக அரச வர்த்தகக் கூட்டுத்தாபனத்தினால் கொள்வனவு செய்வதற்கு அங்கீகாரம் கிடைத்த பாடசாலை சீருடைத் துணிகளின் அளவு யாதென்பதையும்;

(ii) 2012 ஆம் ஆண்டில் பாடசாலை சீருடைகளுக்காக மேற்படி நிறுவனத்தினால் கொள்வனவு செய்யப்பட்ட துணிகளின் அளவு யாதென்பதையும்;

(iii) அமைச்சரவை அங்கீகாரத்தை விஞ்சும் வகையில் மேலதிகமாக சீருடைத் துணி கொள்வனவு செய்யப்பட்டமைக்கான காரணம் யாதென்பதையும்;

(iv) மேற்படி கொள்வனவு காரணமாக அரசாங்கத்திற்கு ஏற்பட்ட நட்டம் எவ்வளவு என்பதையும்;

(v) இதற்கு பொறுப்புக் கூற வேண்டியவர்கள் யாவர் என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3229/ '12

14\.

கௌரவ ரவி கருணாநாயக்க,— சிவில், விமான சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) மிஹின் லங்கா எயார் லைன்ஸ் தொடர்பாக,

(i) 2012 ஆம் ஆண்டிலிருந்து இற்றை வரைக்குமான இலாபம் அல்லது நட்டத்தையும்;

(ii) 2013 - 2014 ஆம் ஆண்டுகளுக்கான எதிர்பார்க்கப்பட்ட இலாபம் அல்லது நட்டத்தையும்;

(iii) இன்றுள்ளவாறான மூலதனம் மற்றும் ஒதுக்கங்களையும்;

(iv) வேலை செய்யும் ஆட்களின் எண்ணிக்கையையும்;

(v) பணியாளர்களின் எண்ணிக்கை தேவைக்கு அதிகமாகவா அல்லது குறைவாகவா உள்ளதா என்பதையும்;

(vi) ஒரு பணியாளருக்கான செலவினம் மற்றும் ஒரு பணியாளருக்கான இலாபத்தையும்;

(vii) இன்றுள்ளவாறாக வங்கி மேலதிகப் பற்றுடன் குறுங்காலக் கடன்கள், இடைக்கால மற்றும் நீண்டகால கடன்களின் மொத்தத்தையும்

அவர் கூறுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3529/ '13

15\.

கௌரவ புத்திக பதிரண,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) மாலிம்பட பிரதேச செயலாளர் ஆளுகைப் பிரதேசத்தினுள் வயல் காணிகள் மீட்கப்படுவதாக பொதுமக்கள் குற்றஞ் சாட்டுவதை அறிவாரா என்பதையும்;

(ii) 2005 ஆம் ஆண்டு தொடக்கம் இற்றை வரை மேற்படி பிரதேச செயலாளர் ஆளுகைப் பிரதேசத்தினுள் அனுமதியின்றி மீட்கப்பட்டுள்ள வயற் காணிகளின் பரப்பளவு எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி அனுமதியற்ற காணி மீட்புகள் தொடர்பில் முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளனவா என்பதையும்;

(iv) ஆமெனில், கிடைக்கப்பெற்றுள்ள முறைப்பாடுகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(v) மேற்படி முறைப்பாடுகள் தொடர்பில் விசாரணைகள் நடத்தப்பட்டு சட்ட ரீதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பதையும்;

(vi) இதற்கமைய மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) 2005 ஆம் ஆண்டு தொடக்கம் இற்றை வரை மாலிம்பட பிரதேச செயலாளர் ஆளுகைப் பிரதேசத்தினுள் வயற் காணிகளை மீட்பதற்கு சட்ட ரீதியாக அனுமதி பெறப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், மீட்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ள வயற் காணிகளின் பரப்பளவு எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி வயற் காணிகளை மீட்பதற்கு சந்தர்ப்பம் வழங்கியமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

இ) இன்றேல், ஏன்?

## அனுதாபப் பிரேரணை

1.

காலஞ்சென்ற முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ ரஞ்சித் நவரத்ன

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

* 1.

முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர்,— செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் கீழ் கட்டளை (இல.1),— திருத்தப்பட்டவாறான 2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவின் கீழ் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2014 சனவரி 30 ஆம் திகதிய 1847/35 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2014.02.18 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 2.

முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர்,— செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் கீழ் கட்டளை (இல.2),— திருத்தப்பட்டவாறான 2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவின் கீழ் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2014 சனவரி 30 ஆம் திகதிய 1847/36 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2014.02.18 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 3.

முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர்,— செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் கீழ் கட்டளை (இல.3),— திருத்தப்பட்டவாறான 2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவின் கீழ் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2014 சனவரி 30 ஆம் திகதிய 1847/37 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2014.02.18 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 4.

சுரங்கங்கள், கனிப்பொருட்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 5.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல.1),— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் குவைட் நாட்டரசின் அரசாங்கத்திற்கும் இடையே முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் இருவயினொத்த முதலீட்டுப் பாதுகாப்பு ஒப்பந்தம், அத்தகைய வெளிநாட்டு அரசினாலும், அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கட்டியமைக்கப்பட்ட கூட்டுத்தாபனங் களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக 2009 நவெம்பர் மாதம் 05 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2011.09.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒப்பந்தமானது அது தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாகவுள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 6.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல.2),— முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் பாதுகாப்பு என்பவற்றுக்கான இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கம் மற்றும் வியட்நாம் சோசலிச குடியரசு அரசாங்கம் ஆகியவற்றுக்கிடையேயான ஒப்பந்தம், அத்தகைய வெளிநாட்டு அரசினாலும், அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கூட்டிணைக்கப்பட்ட கூட்டுத்தாபனங்களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக 2009 ஒற்றோபர் மாதம் 22 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2011.09.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான ஒப்பந்தமானது அது தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாக உள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 7.

போக்குவரத்து அமைச்சர்,— மோட்டார் வாகனச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— (203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவுடனும் 19 ஆம் உட்பிரிவுடனும் சேர்த்து வாசிக்கப்படும் அச் சட்டத்தின் 237 ஆம் பிரிவின் கீழ் போக்குவரத்து அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2013 யூலை மாதம் 31 ஆந் திகதிய 1821/31 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2013.11.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 8.

தொழில், தொழில் உறவுகள் அமைச்சர்,— ஊழியர் சகாய நிதியச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— காலத்துக்குகாலம் திருத்தப்பட்டவாறான 1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, ஊழியர் சகாய நிதியச் சட்டத்தின் 46 ஆம் பிரிவின் கீழ் தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு 2013 மே மாதம் 13 ஆந் திகதிய 1810/20 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2013.06.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 9.

காணி, காணி அபிவிருத்தி அமைச்சர்,— உரித்துப் பதிவுச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, உரித்துப் பதிவுச் சட்டத்தின் 60 ஆம் மற்றும் 62 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 67 ஆம் பிரிவின் கீழ் காணி, காணி அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2009 ஓகத்து மாதம் 24 ஆந் திகதிய 1616/23 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2010.05.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 10.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— தாவர விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் கட்டளை,— (469 ஆம் அத்தியாயமான) தாவர விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் கமநல சேவைகள், வனசீவராசிகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2011 திசெம்பர் மாதம் 06 ஆந் திகதிய 1735/21 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.12.13 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

11.

ஸ்ரீ லங்கா மகளிர் சம்மேளனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

12.

தற்காப்புக் கலைகளுக்கான நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

13.

த இன்ஸ்ரிரியூட் ஒவ் சேர்டிபைட் பப்ளிக் எக்கவுன்டன்ஸ் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

14.

அல் ஜாமியாத்துல் கவ்ஸிய்யா (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

15.

பாராளுமன்றத்தின் இளைப்பாறிய பணியாளர் சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

16.

பி. ஹரிசன் சமுதாய அபிவிருத்தி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

17.

மட்டக்களப்பு வாலிப கிறிஸ்தவ சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

18.

மகமெவுனாவ சதஹம் சேவாவ (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

19.

ஸிவ்முனி ஸே வெஹெர பௌத்த மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

20.

வசந்த சேணாநாயக்க மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

21.

இலங்கை உளவியல் கழகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றன.